[20th November 1963

பொருட்டுக் கூட்டுறவுத் துறையின் கிராம வீட்டு வசதித் திட்டத்தையும் ஹரிஜன நலத்துறையின் வீட்டு வசதித் திட்டத்தையும் ஒன்றுகச் சேர்த்து நிறைவேற்றுவதற்கான திட்டங்களை ஹரிஜன நலத்துறை டைரக்டர் அனுப்பியுள்ளார். தற்போதைய தேசிய நெருக்கடி நிலை தீர்ந்த பிறகு இப்பிரச்சனையை எடுத்துக்கொள்வதென்று தீர்மானிக்கப்பட்டது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : 2,500 ரூபாய் வரைக்கும் கொடுக்கக் கூடிய தொகையில் எந்த அளவுக்குக் கடன், எந்த அளவுக்கு மான்யம்? ஹரிஜனங்கள் பெரும்பாலானவர்கள் 2,500 ரூபாய் கொடுக்க முடியாத காரணத்தினுல் இது கடனுகக் கொடுக்கப்படுமா அல்லது மான்யமாகக் கொடுக்கப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன் : ஷேர் காப்பிட்டலைப் பொறுத்த வரையில் பாதியை கடனுக அரசாங்கம் கொடுக்கும். பாதியை அவர்களே போடவேண்டும்.

தமிழாசிரியர்கள் (உயர் துவக்கப் பள்ளிகள்)

* 346 கேள்வி—திரு. முனு. ஆதி: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியன்களைச் சார்ந்த உயர் துவக்கப்பள்ளிகளில் கட்டாயமாக வித்துவான் அல்லது புலவர் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக்கொண்டே தமிழ் போதிக்கச் செய்தல் வேண்டும் என அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளதா? விவரமென்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எல்லா வகையான நிர்வாகங்களிலும் உள்ள உயர் துவக்கப் பள்ளிகளில் VI, VII, VIII ஸ்டாண்டர்டுகளில், மொத்தமாகப் பார்க்கும்போது நான்கு பிரிவுகள் அல்லது அதற்குமேல் இருந்தால், தமிழ்ப் பண்டிதர்களைக் கொண்டே தமிழ் கற்பிக்க வேண்டுமென அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது.

The Government have ordered that in higher elementary schools under all kinds of managements, having four or more sections in standards VI to VIII taken together, Tamil should be taught only by a Tamil Pandit.

திரு. முனு. ஆதி : தலைவர் அவர்களே, சில உயர்தர ஆரம்பப் பள்ளிகளில் செகண்டரி கிரேட் ஆசிரியர்களையே வைத்துக் கொண்டு நடத்துகிறுர்கள் என்ற புகார் வந்திருக்கிறதா? அப்படியானுல் அதன் மீது சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முன்பு அவ்வாறு செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் இருந்தார்கள். ஆனுல் இப்போது நான் கூறிய விடையின்படி, 4 பிரிவுகளுக்கு மேல் இருந்தால் தமிழ்ப் பண்டிதர் வைக்கவேண்டுமென்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

20th November 1963]

திரு. மா. இராசாங்கம் : கேரள மாநிலத்தில் தமிழ் உபாத்தியாயர்கள் கிடைக்காமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். உடனடியாக அவர்களை இங்கிருந்து அனுப்பி வைக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தமிழ் ஆசிரியர்களை நாம் கட்டாயப்படுத்தி அனுப்ப முடியாது. அவர்களாகப் போகத் தயாராக இருக்கவேண்டும்.

Working of Forest Department in Tirunelveli district

* 347 *Q.*—Sri R. PONNAPPA NADAR : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any contract was given for the extraction and transportation of timber from Survey Nos. 2693/2 and 2694/2 of Darsanamcope village in Azhagiapandiapuram range of Tirunelveli South Division;

(*b*) if so, the rate of contract and the extent of profit derived by the Government; and

(*c*) whether there has been delay or loss in the work and if so who was responsible for it?

The Hon. Sri N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) Yes. An agreement was executed by one, Sri P. Mani Raj, Rajapalayam, for extraction and transport of 4,609 trees (64,400 c.ft.) (Royal trees) from the Survey numbers in question.

(*b*) & (*c*) The rate for the extraction and transport of timber is Rs. 0.95 per cubic foot. The contractor could not continue the work of extraction and transport of timber as per agreement executed by him because the whole matter is now pending before the High Court, Madras.

Sri R. PONNAPPA NADAR : Will the Government take steps to expedite the case?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : ஹைகோர்ட்டில் செய்த முடிவின் மீது அப்பீலுக்குப் போக இருக்கிறோம். ஆகையால் இப்போது அது முடியாது.

ஷெட்யூல் வகுப்பினருக்கான மாவட்டக் கமிட்டிகள்

* *348* கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஷெட்யூல்டு வகுப்பினர்களின் குறைகளைக் கவனிக்க மாவட்ட கமிட்டிகளை நிறுவும்படி மாநில சர்க்காரை மத்திய சர்க்கார் உத்தரவிட்டுள்ளார்களா ?

(இ) அப்படியானால், மாநில சர்க்கார் எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.